REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஏப்ரல் 26 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 89 இல. 97 | April 26,Monday, 2021 | 16பக்கங்கள் | 30/-

நாட்டில் கொவிட் பரவல் அதிகரிப்பு;

## இந்து விவகாரங்கள் தொடர்பாக பாபு சர்மா குருக்கள் விளக்கம்



நாட்டில் கொவிட் தொற்று அதிகரித்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு தெரிவித்துள்ள கொவிட் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவ தளபதி 06



உலகில் ஒரு பில்லியன் தடுப்பூசிகள் 02



இன்று சித்திரா பௌர்ணமி 04

கள்ளியங்காட்டில் நவீன சிறுவர் உல்லாச பூங்கா 10



இலங்கை–பங்களாதேஷ் முதல் டெஸ்ட் சமநிலை 16



நாட்டை முடக்குவது வைரஸ் பரவ... க இருக்காது;

# கொவிட் ... பிரச்சினைக்கு தடுப்பூசி ... இறுதித் தீர்வு






- அரசு அதற்கு தயார்; சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவது மக்களின் பொறுப்பு
- அஸ்ட்ரா செனெகா தடுப்பூசி இதுவரை 9,25,242 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் நாட்டு மக்கள் சகலருக்கும் கிடைக்க ஏற்பாடு என்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

கொவிட் 19 நோய்த் தொற்றுப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு தடுப்பூசி மட்டுமேயாகும். மக்களுக்கு தடுப்பூசியை பெற்றுக்கொடுப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமொன்று அரசாங்கத்திடம் உள்ளது. இந்த சவாலை சிறப்பாக வெற்றி கொள்வதற்கு கொவிட் நோய்த் தொற்று பரவிய முதல் சுற்றின்போது செய்ததைப் போன்று சுகாதார அதிகாரிகள் பரிந்துரைத்துள்ள அனைத்து சட்டதிட்டங்கள், வழிகாட்டல்களை மக்கள் முழுமையாக பின்பற்ற வேண்டுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரியுள்ளார்.

கொரோனா பரவல் தொடர்பில் நேற்று விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர், பொருளாதார செயற்பாடுகளை முற்றாக முடக்கிவிடக்கூடிய வகையில் ஊரடங்கு சட்டத்தை பிறப்பிப்பது இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு செய்ய முடியாதது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள அவர்,

உலக சுகாதார ஸ்தாபனம் தற்போது அங்கீகரித்துள்ள மற்றும் எதிர்காலத்தில் அங்கீகாரம் வழங்கவுள்ள கொவிட் ஒழிப்பு தடுப்பூசிகளில் நான்கு வகை தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளை செய்துள்ளது. முதலில் கொண்டுவரப்பட்ட அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி 925,242 பேருக்கு இதுவரையில் வழங்கப்பட்டுள்ளது. இத்தடுப்பூசியின் இரண்டாவது 06

## வவுனியா விபத்தில் 9 வயது சிறுமி பலி

தாயார் உட்பட இருவர் படுகாயம்



வவுனியா இரட்டைப் பெரியகுளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒன்பது வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளார். இந்த விபத்து, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 06

விசாரணை அதிகாரிகளின் தீர்மானத்தின் பிரகாரம்

## ரிஷாத், ரியாஜ் இருவருக்கும் 90 நாட்கள் தடுப்புக்காவல்?





72 மணிநேர விசாரணையின் பின் தீர்மானம்



லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனதும், அவரது சகோதரர் றியாஜ் பதியுதீனதும் தற்போதைய 72 மணித்தியால தடுப்பு முடிவடைந்ததும், 90 நாட்கள் தடுப்பு உத்தரவொன்றைப் பெற விசாரணையாளர்கள் எதிர்பார்ப்பதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். 06

## JVPக்கு தீவிரவாத இஸ்லாமிய அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு

விபரங்கள் கிடைத்துள்ளன; விரைவில் வெளியிடப்படும்

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜேவிபிக்கும் பல இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளிற்கும் இடையிலான உடன்பாடுகள் குறித்த விபரங்கள் வெளியாகியுள்ளன என அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீனிற்கு காணப்பட்ட தொடர்புகள் குறித்த அனைத்து விபரங்களும் தெரியவந்ததன் காரணமாகவே அவர் கைது செய்யப்பட்டார் 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்;

## தாக்குதலுடன் தொடர்புடைய சகலரும் கைது செய்யப்படுவர்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அறிக்கையின் பிரதிகள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய தாக்குதலுடன் தொடர்புடைய சகலரும் துரிதமாக கைது செய்யப்படுவர் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் (24) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் 06

சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி

## சகல பாடசாலைகளும் தொடர்ந்தும் இயங்கும்

கல்வியமைச்சு அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

சகல பாடசாலைகளும் தற்போது இயங்கும் முறையில் சுகாதார வழிகாட்டியினை பின்பற்றி தொடர்ந்தும் முன்னெடுத்து செல்லப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதிபா්‍ෂ... கல்வி அமைச்சு MINISTRY OF EDUCATION

பாடசாலைகளின் அதிபர்கள் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் ஊடாக அந்தந்த பாடசாலைகளின் செயற்பாடுகள் முன்னெடுத்து செல்லப்படும் என கல்வி அமைச்சின் 06

## யாழ். திருநகரில் ஹோட்டல் கல்லூரி

10 மில்லியன் நிதி ஒதுக்கீடு



வடமாகாணத்தில் ஹோட்டல் கல்லூரி ஒன்றை நிர்மாணிப்பதற்கு சுற்றுலாத்துறை அமைச்சினால் முதற்கட்டமாக 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் 06

### ரமழான் தொழுகை நேரம்

| | |
|---|---|
| திகதி | 25 - 29 |
| சஹர் | 04 - 26 |
| சுபஹ் | 04 - 41 |
| சூ. உதயம் | 05- 59 |
| லுஹர் | 12 - 10 |
| அஸர் | 03 - 23 |
| ம:ரிப் | 06 - 19 |
| இஷா | 07 - 30 |

மலையக மக்கள் முன்னணி இளைஞர் மாநாடு;

## கலந்துகொள்வதாக உறுதியளித்த சாணக்கியன் இறுதி நேரத்தில் சதி

18 வயதை எய்தியதும் வாக்களிக்க தகுதி;

## வாக்காளர் பதிவேட்டில் பெயரை சேர்க்கவும் ஏற்பாடு

## ரிஷாத் கைதுக்கு ஹக்கீம் கண்டனம்

நாட்டில் சட்டத்தின் ஆட்சி அதலபாதாளத்திற்குச் சென்